1979 ஏப்ரல் 16] [திரு. பி. முசிறிப்புத்தன்]

லத்தீப் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும் சில தகவல்கள் தவறாக அரசுக்கு தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எந்த வகையில் தவறு என்று அவர்கள் குறிப்பிட்டால் அரசு உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தவறு நடந்திருப்பது ஒன்றுதான். அவர்களுக்கு வேண்டிய பட்டா மனைகள் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இன்றைக்குத் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள் பாறைகள், குன்றின் மேல் உள்ள பகுதிகளில் அவர்கள் நிற்கிறார்கள், வீட்டு மனைகள் கொடுக்கப்படவில்லை. அது தான் அடிப்படை தவறு, அது கொடுக்கப்படவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தக் குடியிருப்பு ஏற்ற இடத்தில் இல்லை என்று சொல்கிறார்கள் அதற்குரிய முறையிலே அவர்கள் குறிப்பு தந்தால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை

திரு. பா. க. சி. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே. 1973-74 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கை இவற்றின் மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (எட்டாவது அறிக்கை) தலைவர் சார்பாக அளிக்கிறேன்.

5. வரவு - செலவுத் திட்டம், 1979-80 வாக்கெடுப்பு(தொடர்ச்சி)

அ. கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்

ஆ. கோரிக்கை எண் 11-மாவட்ட நிர்வாகம்

திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு